# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2006 / 2007

## Held in May 2007

## BBA 36 – PROJECT MANAGEMENT

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) கருத்திட்ட வாழ்க்கை வட்ட எண்ணக்கருவினை விளக்குக. கருத்திட்ட வாழ்க்கை வட்டத்தின் கட்டங்களை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) எந்தவொரு கருத்திட்டத்தினதும் சிறந்த அமுல்படுத்தலுக்கு தகுந்ததொரு நிறுவனக் கட்டமைப்பு முன் நிபந்தனையாக அமையப்பெற்றுள்ளது. அவ்வாறான இரு நிறுவனக் கட்டமைப்புக்களை கவனத்திற்கொண்டு, அவை பொருத்தமாக அமையப்பெறும் சந்தர்ப்பங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

02. (அ) வளங்களைத் திரட்டி வழங்குவற்கான கருத்திட்ட முகாமையாளரொருவரின் பொறுப்பினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) சாத்தியக் கற்கை ஒன்றினை நடத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

03. கட்டுப்பாட்டு முறைமையொன்றினை வரைவிலக்கணப்படுத்துக. கருத்திட்டமொன்றைக் கட்டுப்படுத்துவதில் பயன்படுத்துவதற்கு கருத்திட்ட முகாமையாளரொருவருக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ள கருவிகள் யாவை? சிறந்ததொரு கட்டுப்பாட்டு முறைமையின் சில பண்புகளை அடையாளம் கண்டு விபரிக்குக.

(20 புள்ளிகள்)

04. (அ) புதியதொரு கணனி மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கருத்திட்ட முகாமையாளரொருவர் எவ்வாறு நிச்சயமற்ற தன்மையைக் கையாளலாம் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) வேலைத் துண்டாடல் கட்டமைப்பினை வடிவமைத்து பயன்படுத்துவதற்கான அடிப்படை படிநிலைகளைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

05. (அ) அனல் மின் நிலையமொன்றினை நிர்மாணிக்கும் பொருட்டு நடத்தப்பட இருக்கின்ற சாத்தியக் கற்கையொன்றில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

(ஆ) குழு அபிவிருத்தி மாதிரியின் கட்டங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) அளவீட்டுச் சட்டப் பகுப்பாய்வு
(ஆ) விளைவு அடிப்படை முகாமைத்துவம்
(இ) கருத்திட்ட முகாமையாளரின் பண்புகள்
(ஈ) அலைதல் முகாமைத்துவம்

(4 x 5 = 20 புள்ளிகள்)

****